செய்தி வெளியீடு எண்: 597 நாள் : 27.11.2015

**<u>பத்திரிக்கைச்செய்தி</u>**

**<u>சமையலர் பணியிடங்களுக்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.</u>**

சென்னை 28, அகில இந்திய குடிமைப்பணித்தேர்வு பயிற்சி மைய விடுதியில் காலியாக உள்ள 6 சமையலர் பணியிடங்கள் (சமையலர் காலமுறை ஊதியம் 2, விடுதிப்பணியாளர் தினக்கூலி 2, சமையல் உதவியாளர் மற்றும் பரிமாறுபவர் தினக்கூலி 2) நேர்காணல் மூலம் இனசுழற்சியின் அடிப்படையில் நிரப்பப்பட உள்ளது. இதற்காக பின்வரும் தகுதி உள்ளவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

(1) விண்ணப்பதாரர் தமிழில் எழுத படிக்க தெரிந்திருக்க வேண்டும்.

(2) சைவ மற்றும் அசைவ உணவு வகைகள் சமைக்க தெரிந்திருக்க வேண்டும்.

(3) வயது வரம்பு 01.07.2015 தேதியில் SC/ SCA/ ST – 18 முதல் 35 வரை, BC/BCM/MBC – 18 முதல் 32 வரை, இதர பிரிவினர் 18 முதல் 30 வயதிற்கு மிகாமல் இருக்க வேண்டும்.

(4) விண்ணப்பதாரர் சென்னை மாவட்டத்தில் வசிப்பவராக இருக்கவேண்டும்.

மேற்படி தகுதிகளுடன் அகில இந்திய குடிமைப்பணித்தேர்வு பயிற்சி மைய விடுதியில் பணிபுரிய விருப்பம் உள்ளவர்கள், உரிய விண்ணப்பப்படிவத்தினை www.civilservicecoaching.com என்ற இவ்வலுவலக இணையதள முகவரியில் பதிவிறக்கம் செய்து, பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்தினை "**<u>முதல்வர் அகில இந்திய குடிமைப்பணித்தேர்வு பயிற்சி மையம், காஞ்சி வளாகம், எண் 163/1 பி.எஸ்.குமாரசாமி ராஜா சாலை, கிரின் வேஸ் ரோடு, சென்னை –600 028</u>**" என்ற முகவரிக்கு **14.12.2015 –** க்குள் கிடைக்கும் வகையில் பதிவு தபால் மூலம் அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

மோகன் வர்கீஸ் சுங்கத். இ.ஆ.ப.,
கூடுதல் தலைமைச்செயலர்/
பயிற்சித்துறைத்தலைவர்,
சென்னை –28.

**வெளியீடு:**
**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**